பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 25 திங்கட்கிழமை 11.01.2021 கதிர் 298

## கொரோனாச் சாவு 232 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 232ஆக அதிகரித்துள்ளது.

நேற்று 3 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரசதகவல்திணைக்களம்வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

### வெற்றியுடன் முடிவுக்கு வந்தது மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம்

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு மீண்டும் அடிக்கல்; சட்டபூர்வமாகக் கட்டப்படும் எனத் துணைவேந்தர் உறுதி!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அதே இடத்தில் நிறுவுவதற்கான அடிக்கல் இன்று காலை துணைவேந்தர் மற்றும் மாணவர்கள் ஆகியோரால் நாட்டப்பட்டது.

சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்று முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவால் உறுதியளிக்கப்பட்டது. அதன்படி அவரால் அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கி மூன்றாவது நாளாகத் தொடர்ந்த மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தையும் துணைவேந்தர் முடித்து வைத்தார்.

இன்று காலை 7 மணியளவில் துணைவேந்தர்,

2

## அமைச்சர் வாசுவுக்கும் கொரோனாத் தொற்று



அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இன்று காலை அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்ற படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தள்ளார்.

2

## கயந்தவுக்கு தொற்றில்லை

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலகவும், அவரது குடும்பத்தினரும் பி.சி.ஆர். பரிசோதனை செய்துள்ளனர் என்றும், அவர்களில் எவருக்கும் தொற்று உறுதியாகவில்லை என்றும் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானார் என அடையாளம் காணப்பட்ட

2

# தூபி இடித்தழிப்புக்கு எதிராக முடங்கியது வடக்கு – கிழக்கு!

### வெறிச்சோடிக் காணப்பட்டன பிரதான நகரங்கள்




**(எஸ்.நிதர்ஷன்)**

**யாழ்ப்பாணம், ஜனவரி 11**

**யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி இரவோடிரவாக இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.**

2

## பதினான்கு வான் கதவுகளும் இரணைமடுக் குளத்தில் திறப்பு



கிளிநொச்சி இரணைமடு குளத்தின் சகல (14) வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று பகல் 12 மணியளவில் இரணைமடு குளத்தின் சகல வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2

## சுகாதார விதிமுறைகளை மீறும் அலுவலகங்களுக்கு இனி ஆப்பு

### பொலிஸார் விசேட நடவடிக்கை



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமை தொடரும் சூழலில், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில்

2

## பிள்ளையானுக்கு எதிரான ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கை இனிமேல் தொடர்வதில்லை

### மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்குச் சட்டமா அதிபர் அறிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பான வழக்கைத் தொடர்ந்தும் நடத்துவதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

குறித்த வழக்கு இன்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் புதன்கிழமை வழங்கப்படும் என்றும்

2

## சுமந்திரனின் வீடும் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் யாழ்ப்பாண வதிவிடத்துக்கும் தனிமைப்படுத்தலுக்கான அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது.

2

## சுகாதார விதிமுறைக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது இடங்கள், நிறுவனங்கள் மற்றும் வர்த்த நிலையங்களில் சுகாதார ஒழுங்கு விதிகள் முறையாக பின்பற்றப் படுகின்றனவா என்பதனை ஆராய்வதற்காக விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைய இன்று முதல் மேல் மாகாணத்தில் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு வருகை தரும் அனைத்து நபர்களின் பதிவையும் பராமரிப்பது கட்டாயமாகும் என்றும், கைகளைக் கழுவுவதற்கான வசதிகளை வழங்குதல், வெப்பநிலையைச் சரிபார்த்தல், தொழிலாளர்களுக்கான வளாகத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்றவற்றை உறுதி செய்தல் வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

மேலும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும், சட்டதிட்டங்களை மீறும் அலுவலகங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராகத் தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## சுமந்திரனின் வீடும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்ற 'லொபி'யில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் உரையாடியபடி சுமந்திரன் கஞ்சி அருந்தியுள்ளார்.

ரவூப் ஹக்கீமுக்கு கொரோனாத் தொற்று உண்டென நேற்று தெரியப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நாடாளுமன்ற அவருடன் நெருங்கிப் பழகிய 15 எம்.பிக்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுமந்திரனுக்கு நேற்று மேற்படி விடயம் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் இன்று காலை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டார்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸாரால் சுமந்திரனின் யாழ். வதிவிடத்துக்கு தனிமைப்படுத்தல் அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது. அவரது வீட்டுக்கு அருகிலுள்ள வீடும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிள்ளையானுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி நத்தார் ஆராதனையின்போது மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி உட்பட பொது மக்கள் 7 பேர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேநேரம், சட்டமா அதிபரின் ஒப்புதலைத் தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்குப் பிணை வழங்கியது.

தன் மீதான குற்றச்சாட்டுப் போலியான வாக்குமூலங்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டது எனவும், இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்த வேண்டும் எனவும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மைத்திரிக்கு சந்திரிகா காட்டமான கடிதம்



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் காட்டமான கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பது சட்டவிரோதமானது என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவின் ஊடகமொன்றுக்கு மைத்திரி வழங்கிய செவ்வியில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு தனது கடிதத்தில் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தாம் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்தான் எனவும், தாம் கட்சியின் மத்திய செயற்குழு அங்கத்தவர் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நீண்டநாள்களாகக் கட்சியின் பொதுச்செயலாளராக கடமையாற்றிய மைத்திரிபாலவுக்கு, கட்சியின் யாப்புப் பற்றிய தெளிவின்மை என்பது நகைப்புக்குரியது எனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பைக் கண்டித்து

# இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற வைகோ உட்பட 300 பேர் கைது

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளியவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த முயன்ற ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட 300 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

லயோலா கல்லூரி அருகே வைகோ தலைமையில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பின்னர் அங்கிருந்து அவர்கள் பேரணியாக, இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த சென்றபோது நடுவழியில் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைதுசெய்தனர்.



## பதினான்கு வான் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக நீர் வரத்து காணப்படுவதால் படிப்படியாக வான் கதவுகள் திறக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் நீர்ப் பாசான திணைக்களம் அறிவுறுத்தி உள்ளது.

இதேவேளை பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பரந்தன், உமையாள்புரம் உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

## தூபி இடித்தழிப்புக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் வடக்கு - கிழக்கு வர்த்தக சங்கங்கள், கடற்றொழில் சங்கங்கள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பொது அமைப்புகள் எனப் பல அமைப்புகள் ஆதரவு வழங்கின.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன. அரச பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டன. பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன.

இதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பிரதான நகரங்கள் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்தக் ஹர்த்தால் போராட்டத்துக்கு முஸ்லிம் சமூகத்தினரும், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## கயந்தவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமுடன் நெருங்கிய தொடர்பில் கயந்த கருணாதிலக இருந்தார் என்ற அடிப்படையில் அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அந்தப் பரிசோதனை முடிவுகளிலேயே கயந்த கருணாதிலகவும், அவரது குடும்பத்தினரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹக்கீமுடன் நேரடித் தொடர்பில் இருந்தனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தமது குடும்பத்தினருடன் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## அமைச்சர் வாசுவுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

ஏற்கனவே இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டிருந்தது. இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுடன் பல்கலைக்கழத்தினுள் செல்ல முற்பட்டபோது பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனையும் மீறி துணைவேந்தர் மாணவர்களை அழைத்துக்கொண்டு வளாகத்தினுள் சென்று பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

தொடர்ந்து நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்துக்கு மாணவர்களுடன் துணைவேந்தர் சென்றபோது அங்கு வந்திருந்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தடுத்து நிறுத்தப் பட்டனர்.

அதன்போது , துணைவேந்தர், நாம் தற்போது எந்தவிதக் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடவில்லை. தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டப் போகின்றோம். என்னுடைய மாணவர்கள் மூன்று நாள்களாக உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனை முடித்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளேன். எம்மைத் தடுக்காதீர்கள் என்றார்.

அதையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களை நினைவிடத்துக்குச் செல்வதற்கு அனுமதியளித்தார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி நீர்கொழும்பு சிறைச்சாலையில் 62 வயது ஆண் கைதி ஒருவர், கொழும்பு 14ஐச் சேர்ந்த 80 வயது பெண், இரத்தினபுரியைச் சேர்ந்த 64 வயது ஆண் ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

# வவுனியாவில் மேலும் இருவருக்கு இன்று கொரோனாத் தொற்று!

### ஒரு வாரத்தில் எண்ணிக்கை 73 ஆக அதிகரிப்பு

வவுனியாவில் இன்று மாலை வெளியாகிய பி.சி.ஆர் முடிவுகளில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பட்டாணிச்சூர் மற்றும் நகர வர்த்தக நிலைய பகுதியில் கடந்த வாரம் 62 பேரும், நேற்று முன்தினம் பட்டாணிச்சூர், ஈச்சங்குளம், கெப்பறிக் கொலவ பகுதியைச் சேர்ந்த 8 பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டமையையடுத்து வவுனியாவின் பல பகுதிகளும் முடக்கப்பட்டன. அத்துடன் அவர்களுடன் தொடர்புடைய பலரிடமும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இன்று காலை வெளியாகிய பி.சி.ஆர். முடிவுகளின்படி வவுனியா வடக்கில் ஆசிரியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இன்று மாலை வெளியாகிய பி.சி. ஆர். முடிவுகளில் வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவருக்கும், நெஞ்சுவலி காரணமாக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குமாக மேலும் இரண்டு பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள் ளனர்.

இந்நிலையில் கடந்த வாரம் முதல் வவுனியாவில் 73 கொரோனாத் தொற்றாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர் புடையவர்களை தனிமைப்படுத்தி பி.சீ.ஆர். எடுக்கும் நடவடிக்கைகளில் சுகாதார துறையினர் ஈடுபட்டுள் ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அறுபது மணி நேரப் பட்டறிவு

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பார்கள். அப்படித்தான் முடிந்திருக்கின்றது யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் அதிரடியாக ஆரம்பித்து வைத்த கலகமும் என்று தோன்றுகின்றது.

உச்சத்தில் இருந்து ஒரே நாளில் வில்லன் ஸ்தானத்துக்கு வீழ்ந்த யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, மீண்டும் ஒரே இரவில் தன்னை கதாநாயகன் அந்தஸ்துக்கு துணிச்சலுடன் தூக்கி நிறுத்தி, தான் அலங்கரிக்கும் பதவி நிலையின் தனித்துவச் சிறப்பை உலகுக்கு எடுத்தியம்பி நிற்கின்றார்.

எந்தப் பத்தியில் அவரை வைதோமோ அந்தப் பத்தியில் அவரைப் பாராட்டி மெச்சும் கைங்கரியத்தை ஓரிரு தினங்களுக்குள் ஆற்றச் செய்யும் அதிசயத்தை அவர் புரிந்திருக்கின்றார்.

இத்தகைய ஓர் இக்கட்டுச் சூழலிலும் – இவ்வளவு பின்னடைவுக்குப் பின்னரும் – தம்மைச் சுதாகரித்துக் கொண்டு, உடைத்த நினைவுத் தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் மூலமே – சட்ட ரீதியாகவே – மீள அமைத்துக் கொடுப்பது என்ற தீர்மானத்தை எடுத்து, அதற்கான அனுமதியையும் மேலிடத்தில் போராடிப் பெற்று, விரைந்து அதைச் செயற்படுத்த எடுத்த அவரின் தற்றுணிவு மெச்சத்தக்கது.

இது, விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என சமாளிப்பு அல்ல. வீழ்ந்தாலும் எழுவோம் என்ற பீனிக்ஸ் பறவையின் மீளெழுச்சி. பின்னடைவிலும் நியாயத்தை நிறுத்தும் தைரியம்.

தன்னுடைய தனிப்பட்ட செயற்பாட்டுக்கு, நடவடிக்கைக்கு விடுக்கப்பட்ட சவாலாக இதைக் கருதாமல், சமுதாயத்துக்கு எழுந்துள்ள நெருக்கடியாகக் கருதி, அவர் கையாண்டமையால்தான் இத்தகைய துணிச்சலான முடிவு ஒன்றைத் தீர்மானிக்க அவரால் இயன்றிருக்கின்றது எனக் கருதுகின்றோம்.

பல்கலைக்கழகத்தை ஒட்டி வெடித்த ஒரு போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது என்பதிலும் பார்க்க, யாழ் பல்கலைக்கழக சமூகத்தை பிளவுபட விடாமல் கட்டிக்காப்பதற்கு, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா எடுத்த மீட்பு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த அறுபது மணி நேரத்தில் கட்டவிழ்ந்த சம்பவங்களும் அவற்றின் அதிர்வுகளும் பல படிப்பினைகளை, அனுபவங்களை, இவற்றை எல்லாம் கடந்து தமிழ் சமூகத்துக்குப் போதுமான மனத்தெம்பையும் தைரியத்தையும் தந்து நிற்கின்றன என்பது கண்கூடு.

விடுதலைப் போராட்டப் பின்னடைவுகளுக்குப் பின்னரும்–

அரசியல் ரீதியான பிளவுபாடுகள், குழு மோதல்களுக்குப் பின்னரும் –

போரியல் ரீதியான பாதிப்புகள், இழப்புகளுக்குப் பின்னரும் –

நாங்கள் தனித்து இருக்கவில்லை, பிளவுபட்டுச் சிதறுண்டு சின்னாபின்னமாகிவிடவில்லை, எமக்கென்று வலுவான ஆதரவு தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களில் மட்டுமல்ல, தாய்த் தமிழகத்திலும், இந்தியாவிலும் அதற்கப்பால் பரந்த உலகெங்கும் உள்ளது என்ற மனத்தெம்பையும் தைரியத்தையும் இந்த அறுபது மணி நேரத்துக்குள் உலகெங்கும் இருந்து பீறிட்ட உணர்வெழுச்சி நமக்குத் தந்து நிற்கின்றது.

போராட்டம் நடத்திய மாணவர்கள் அந்நியர்கள் அல்லர், பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தொல்லை தரும் சக்திகளும் அல்லர், அவர்கள் எனது மாணவர்கள், என் பிளளைகள் என்றுரைத்தமையின் மூலம் – அதையும் கூட இத்துணை எதிர்ப்பு நெருக்கடிகளுக்குப் பின்னரும் துணைவேந்தரே நேரடியாகக் கூறியமையின் மூலம் – யாழ் பல்கலைக்கழகம் பிளவுண்டு நிற்கவில்லை, கருத்து முரண்பாட்டால் பிளவுபட்டும், ஐக்கியப்பட்டே உள்ளது என்ற உண்மை உரத்து உரைக்கப்பட்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல, நமது உரிமைகளில் ஒன்றான நினைவேந்தல் உரிமையை நிலைநாட்டும் தீவிரத்தில் தமிழர்களுடன் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களும் ஒன்றித்தே நிற்கின்றார்கள் என்ற உண்மையை – யதார்த்தத்தை – இன்றைய களநிலைமை எமக்கு எடுத்தியம்பி இருக்கின்றது.

கொள்கை, கோட்பாடு ரீதியாகத் தமிழ்த் தேசிய சக்திகளும், கட்சிகளும் பிளவுபட்டு நின்றாலும் உரிமைக் கோரிக்கை என்ற தளத்தில் அவர்கள் ஒன்றிணையக் கூடிய வாய்ப்பான களப்புறச் சூழல் தாராளமாகத் திறந்தே உள்ளது என்ற நிலைமை எமக்கு இந்த அறுபது மணி நேரத்தில் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக சமூகம் – குறிப்பாக மாணவர் சக்தி – காத்திரமான அதிர்வு அலைகளை ஏற்படுத்தக் கூடிய வலிமையில்தான் நம்மிடம் உள்ளது என்ற அகக் கண்ணை தமிழ் அரசியல் சக்திகளுக்கு இந்த நிகழ்வு படம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உரிமைகள் விடயத்தில் அடிமைப்பட்டுப் போகாதே, எழுச்சியுடன் பீனிக்ஸ் பறவைபோல மீண்டுவா, நாளை நமதே என்ற செய்தியை – மன வலிமையை – ஓர்மத்தை பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் மூலம் நம் தமிழினத்துக்கு உணர்த்த இந்த அறுபது நேர நிகழ்வு வழி செய்திருக்கின்றது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னம் அகற்றப்பட்டதைக் கண்டித்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சார்பில் அந்த ஒன்றியப் பொறுப்பாளர் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஊடகச் செய்தியொன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

இப்பிரச்சினை இன்று காலை சுமுகமான முடிவுக்கு வந்து விட்டபோதும், இந்த அறிக்கை சில விடயங்களைத் தாங்கி நிற்பதால் அது இங்கு பிரசுரமாகின்றது. (ஆ - ர்)

# இறந்தவர்களை நினைவு கூர்வது நாகரிக சமூகத்தில் ஓர் உரிமை!

## அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன.11

இறந்தவர்களை நினைவு கூர்வதென்பது ஜனநாயகத்தை மதிக்கும், மனிதநேயத்தை நேசிக்கும் எந்தவொரு நாகரிக சமூகத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டதற்கு எதிராவோம்!

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னத்தை உடைத்து பலவந்தமாக அகற்றப்பட்டுள்ளது.

08ஆம் திகதி இரவு இதை அகற்றத் தயாராகும் போது மாணவர்களும் பிரதேச மக்களும் எதிர்த்தமையால் பல்கலைக்கழகத்துக்கு ஆயுதப் படை வரவழைக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக நடைபெற்ற படுகொலை யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான மனிதர்கள் இறந்துள்ளனர். அங்கவீனமடைந்துள்ளனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால், அது, மனித நேயம் மரணித்த காலம். அந்த படுகொலை யுத்தத்தில் பலியாகிய தமது உறவினர்களை, நண்பர்களை, தமக்கு நெருக்க மானவர்களை நினைவு கூர்வதற்காக பல்கலைக் கழக மாணவர்கள் இந்த நினைவுச் சின்னத்தை நிர்மாணித்திருந்தனர்.

பொது சமூக நோக்கத்திற்காக, இறந்த மனிதர்கள் தெற்கிலும் நினைவு கூரப்படுகின்றனர். நினைவுச் சின்னங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முப்பது வருட யுத்தத்தில் இறந்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் தூபிகள் தெற்கில் ஏராளமாக உள்ளன. அவர்கள் நினைவு கூரல் விழாக்களை நடத்துகின்றனர். இலவசக் கல்விக்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் அரசினால் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை நினைவு கூர்வதற்காக மாணவ வீரர் நினைவுத் தூபிகள் பல்கலைக் கழக மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்ட மனிதர்களை நினைவு கூர்வதற்காக ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 20ஆம் திகதி பல்கலைக் கழகங்களில் மாணவ வீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதேபோன்று, 71 போராட்டத்தின் போது, 88 – 89 பயங்கர காலத்தில் கொலை செய்யப்பட்ட மனிதர்களை நினைவு கூர்வதற்கான நிகழ்ச்சிகள் தெற்கில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இறந்த மனிதர்களை நினைவு கூரும் அந்த உரிமை வடபுல மக்களுக்கும் அவ்வாறே கிடைக்க வேண்டும். அவர்கள் நடத்திய போராட்டம் நீதியானதா, அநீதியானதா என்பது தனியாகப் பேசப்பட வேண்டிய ஒன்று. அரசியல் கருத்து பேதங்கள் எதுவாக இருந்தாலும் தமக்காகத் தோற்றி நின்று இறந்தனர் எனக் கருதப்படும் மனிதர்களை நினைவு கூர வடபுல மக்களுக்கும் உரிமை உண்டு.

இது ஜனவரி 08 ஆம் திகதி நடந்த தனிப்பட்ட சம்பவமல்ல. இதற்கு முன்பும் வடபுலத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளை அரசாங்கம் தடை செய்தது. ஆயுதங்களைக் கொண்டு அவற்றைத் தடுத்தது. இப்போது இறந்தவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சின்னங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இது பல்கலைக் கழக நிர்வாகத்தின் செயலாகுமெனக் கூறி பல்கலைக் கழக மானியங்கள் ஆணையகமும், அரசாங்கமும் கை கழுவிக் கொள்ள தயாராகின்றன. ஆனால், இது அரசாங்கம் திட்டமிட்டு செய்த செயலாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

வடக்கில் இறந்தவர்கள் நினைவு கூரும் தினங்களைத் தடை செய்ய வேண்டுமென, சின்னங்களை அகற்ற வேண்டுமெனச் சொல்வது தீவிரவாதம் உருவாவதை தடுப்பதற்காம். ஆனால், ஆட்சியாளர்கள் அறிந்து கொண்டே தீவிரவாதம் வேரூன்றுவதற்காக மீண்டும் நிலத்தை செப்பனிடுகிறார்கள். நினைவுச் சின்னங்களை நிர்மாணிப்பதாலோ அல்லது நினைவு கூரல் நிகழ்ச்சிகளை நடத்துவதாலோ தீவிரவாதம் உருவாவதில்லை. அவற்றை மிதித்துச் சிதைத்து விடுவதால்தான். எனவே, தெற்கில் போன்றே வடக்கிலும் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை உண்டென்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இறந்தவர்களை நினைவு கூர்வதென்பது ஜனநாயகத்தை மதிக்கும், மனிதநேயத்தை நேசிக்கும் எந்தவொரு நாகரிக சமூகத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையாகும்.

இந்த உரிமையை பறித்துவிட்டு காயப்பட்ட வடக்கின் இதயத்தில் மீண்டும் உதிரம் சிந்த வைக்கப் பார்க்கிறார்கள். ஆகவே, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இறந்தவர்களின் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டதை அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த தான்தோன்றித்தனமான தலையீடுக்கு எதிராகுமாறு ஜனநாயகத்தை, மனித நேயத்தை மதிக்கும் சகல மக்களிடமும் வேண்டுகிறோம். – என்றுள்ளது.

# விளையாட்டு மைதானத்தை அபகரிப்பதற்கு முயற்சி!

## திருகோணமலை அனந்தபுரியில் பதற்றம்

திருகோணமலை – அனந்தபுரி பகுதியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அடாத்தாக வேலி அமைக்க, சிலர் முற்பட்டபோது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மிக நீண்ட காலமாக அனந்தபுரி பகுதியிலுள்ள இந்த மைதானம் அந்தப் பகுதி இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த மைதானத்துக்குப் பின்புறமாக உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காணிக்கு அருகே குறித்த கட்சியினரால் நேற்றுக் காலை வேலி அமைக்கப்பட்டதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்தே அந்தக் கட்சியினருக்கும் அந்தப் பகுதி இளைஞர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மைதானமானது பல அரசியல் தலைமைகளது உதவியுடன் புனரமைக்கப்பட்டு, தற்போதும் இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு இருக்க, இதனை அபகரிக்கப் பலர் முற்படுகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



மேலும் மைதானம் இல்லாது போனால், இளைஞர்கள் பிழையான வழிமுறைகளுக்கு உட்படக்கூடும் என்பதால், மைதானத்தை மீட்டுத்தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிக நீளமான பாதையில் விமானத்தை இயக்கி இந்தியப் பெண் விமானிகள் சாதனை!

## விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு



வட துருவத்தின் வழியாக உலகின் மிக நீளமான விமானப் பாதையை ஏர் இந்தியாவின் இளம் பெண் கப்டன் சோயா அகர்வால் தலைமையிலான பெண் விமானிகள் கடந்து வரலாற்றுச் சாதனை படைத்து உள்ளனர்.

உலகின் நீளமான விமானப் பாதைகளுள் ஒன்று சான் பிராசிஸ்கோ முதல் பெங்களூர் இடையிலான பாதை. சுமார் 16 ஆயிரிம் கிலோ மீற்றர் நீளமுடைய சவால் நிறைந்த இந்தப் பாதையை பனிபடர்ந்த வட துருவத்தின் வழியாகவே கடக்க வேண்டும். மேலும் சான்பிராசிஸ் கோவிலில் இருந்து புறப்படும் இந்த நீண்ட விமானப் பயணம் இடையே எங்கும் நிற்காமல் பெங்களூருவுக்கு வந்தே தரையிறங்கும்.

இத்தகைய சவால் நிறைந்த – உலகின் நீளமான – தூரத்தை கடப்பதற்கு அதிகப்படியான திறமையும், அனுபவமும் அதோடு தொழில்நுட்பத்தை நன்றாக பயன்படுத்தக் கூடிய விமானிகளால் மட்டுமே முடியும். பல காலமாக இது போன்ற நீளமான விமானப் பாதையில் விமானம் இயக்குவதற்கு ஆண் விமானிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தனர். ஆனால் வரலாற்றில் முதன் முறையாகப் பெண் விமானிகள் கூட்டாக இணைந்து வடதுருவத்தின் மேலான இந்த நீளமான பாதையில் பறக்க அனுமதி அளிக்கப்பட்டது. அதுவும் இந்த விமா னப் பயணத்தை தலைமையேற்று வழிநடத்தும் பொறுப்பு சோயா அகர்வால் என்ற பெண் கப்டனிடம் ஒப்படைக் கப்பட்டது.



அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு? என்ற காலமெல்லாம் இந்த கணினியுக காலத்தில் எங்கேயோ கரைகடந்து காணாமல் போய்விட்டது. அதன்படி இன்று கோடிகணக்கான தூரத்தில் கடல் மேல் பறந்து கண்டங்கள் கடந்து தற்போது வரலாற்றுச் சாதனை படைத்து இந்தியாவிற்கு பெருமை சேர்ந்துள்ளனர் இந்த பெண் விமானிகள்.

கடந்த 9 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு சான்பிராஸ் கோவில் இருந்து ஏர் இந்தியா விமானம் நான்கு பெண் விமானிகள் மற்றும் 238 பயணிகளுடன் புறப்பட்டது. பின்னர் வடதுருவத்தைக் கடந்து அட்லாண்டிக் கடல் வழியாக சுமார் 17 மணி நேரம் தொடர்ச்சியாகப் பயணித்த விமானத்தை இன்று அதிகாலை 3.20 பெங்களூர் கெம்பகவுடா சர்வதேச விமான நிலையத்தில் அதனை வெற்றிகரமாகத் தரை இறக்கியுள்ளனர் சோயா அகர்வால் தலைமையிலான இந்த சாதனை பெண் விமானிகள்.

238 பயணிகளுடன் பாதுகாப்பாக பெங்களூரு வந்து இறங்கி வரலாற்று சாதனைப் படைத்துள்ள கப்டன் சோயா உள்ளிட்ட நான்கு பெண் விமானிகளுக்கு கெம்பகவுடா சர்வதேச விமான நிலையத்தில் ரோஜாப் பூ கொடுத்து உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

இது குறித்து ஏர் இந்தியாவின் பெண் கப்டனான சோயா அகர்வால் கூறுகையில், உலகில் பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்நாளில் வட துருவத்தையோ அல்லது அதன் வரைபடத்தையோ கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நாங்கள் அதன் மேல் வெற்றிகரமாகப் பறந்துள்ளோம். சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் மற்றும் ஏர் இந்தியா நிறுவனம் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். போயிங் – 777 விமானத்தில் கேப்டனாக கட்டளையிட்டது ஒரு பொன்னான வாய்ப்பு. அதுவும் வட துருவத்தின் மீது உலகின் மிக நீண்ட விமானப் பாதையில் பறந்தது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் என்று கூறியுள்ளார்.

மேலும், என்னுடன் தன்மாய் பாபகரி, ஆகான்ா சோனவனே மற்றும் சிவானி மன்ஹாஸ் ஆகியோர் அடங்கிய அனுபவம் வாய்ந்த பெண் விமானிகள் இருப்பது மிகவும் பெருமையளிக்கிறது. பெண் விமானிகள் ஒரு அணியாகச் சேர்ந்து வட துருவத்தின் மீது பறந்து வரலாற்றை உருவாக்குவது இதுவே முதல் முறையாகும். உண்மையில் எந்தவொரு தொழில்முறை விமானிக்கும் இது பெரும் சாதனை கனவாகும் என்று கூறியுள்ளார்.

சமூகத்தில் இன்று பெண்கள் மீது எத்தகைய அழுத்தம் இருந்தாலும் அதனைத் துணிவுடன் எதிர்கொண்டு சாதனைப் படைக்க வேண்டும். இன்றைய நாகரீக உலகத்தில் பெண்களால் சாத்தியமற்றவை என்ற சொல்லக்கூடிய சாதனைகள் எதுவுமே இல்லை. அதற்கு துணிவும், மன உறுதியுமே போதுமானது. அதற்கு சிறந்த உதாரணமாக கண்டங்கள் தாண்டி வரலாற்று சாதனையுடன் பெங்களூர் தரையிறங்கி இருக்கின்றனர் கேப்டன் சோயா அகர்வால் தலைமையிலான இந்த ஆகாச சூரிகள்.

## அரசியலுக்கு வரமாட்டேன் ரஜினி மீண்டும் திட்டவட்டம்

அரசியலுக்குவரக்கோரி சென்னையில் ரசிகர்கள் போராட்டம் நடத்திய நிலையில் ரஜினி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தன்னை அரசியலுக்குவரவேண்டுமென்று கூறி தன்னை யாரும் வேதனைக்கு உள்ளாக்க வேண்டாம் என்றும் அரசியலுக்கு வரப்போவதில்லை என்ற முடிவில் மாற்றமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.



தான் அரசியலுக்கு வராதமை பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென சிலர் ஒரு நிகழ்ச்சியை நடத்தி உள்ளனர் எனவும் தான் ஏன் அரசியலுக்கு வர முடியவில்லை என்பதற்கான காரணங்களை ஏற்கனவே விரிவாக விளக்கி உள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மகாராஷ்டிரா, டெல்லிக்கும் பரவியது பறவைக் காய்ச்சல்

தலைநகர் டெல்லி மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலும் பறவைக்காய்ச்சல் பரவியி ருப்பது உறுதியாகியுள்ளது.

கேரளா, குஜராத், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் பரவியிருப்பது ஏற்கெனவே கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் டெல்லியில் உள்ள பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களில் இறந்து கிடந்த 8 காக்கைகள், வாத்துகளின் உடல்களை பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி கால்நடைத்துறை அதிகாரிகள் ஆய்வுக்கு உட் படுத்தினர்.

இதில் பறவைக் காய்ச்சல் காரணமாக அவை உயிரிழந் திருப்பது உறுதியாகியுள்ளது. இதேபோல் மகாராஷ்டிர மாநி லம் பார்பானி மாவட்டத்திலும் பறவை காய்ச்சலால் 800 கோழிகள் உயிரிழந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்தியாவில் 9 மாநிலங்களில் பறவை காய்ச் சல் பரவியிருப்பது உறுதியாகியுள்ளது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1989.01.30 | பிறந்த திகதி - 1993.11.25 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - சுவாதி | நட்சத்திரம் - ரேவதி |
| செவ் - --- | பாவம் - 20 1/4 |
| பாவம் - 28 1/2 | செவ் - 12இல் |
| கல்வி - A/L | சூரி/செவ் - 12இல் |
| தொழில் - கனடா P.R | கல்வி - A/L |
| எதிர்பார்ப்பு - அழகான படித்த பெண் | தொழில் - .... |
| | எதிர்பார்ப்பு - வெளிநாடு |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

## எல்லை தாண்டிய சீன வீரரை ஒப்படைத்தது இந்திய ராணுவம்



லடாக் எல்லையில் கடந்த 8 ஆம் திகதி இந்திய இராணுவத்தினர் எல்லைதாண்டிய சீன வீரரை சுற்றிவளைத்து கைது செய்தனர்.

இதையடுத்து, பிடிபட்ட சீன வீரரிடம் இந்திய இராணுவத்தினர் விசாரணை நடத்தியதில் சீன வீரர் தவறுதலாக இந்திய எல்லைக்குள் நுழைந்தமை தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட அந்த வீரரை இந்திய அதிகாரிகள் சீனாவிடம் பத்திரமாக ஒப்படைக்க வேண்டும் என்று சீனா கேட்டுக்கொண்டதற்கமைய அந்த வீரரை சீனாவிடம் ஒப்படைக்கும் நடைமுறைகளை இந்திய இராணுவம் மேற்கொண்டது.

அதன்படி, இன்று காலை 10.10 மணியளவில், சுசுல் – மோல்டோ எல்லையில் வைத்து வீரரை சீன இராணுவத்திடம் ஒப்படைத்ததாக இந்திய இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீர்ன் கடும் பனிப்பொழிவு இயற்கைப் பேரிடராக அறிவிப்பு



காஷ்மீரில் நிலவிவரும் கடும் பனிப்பொழிவை இயற்கைப் பேரிடராக துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அறிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீட்பு வாகனங்கள், அம்புலன்ஸ்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறும், மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளைச் செய்யுமாறும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இயற்கைப் பேரிடராக அறிவிக்கப்பட்டுள்ளதால், பனிப்பொழிவால் பாதிக்கப்படும் மக்களுக்கு, ஜம்மு காஷ்மீர் அரசின் நிவாரணம் மற்றும் நிதியுதவி போன்றவை இனி சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க நாடாளுமன்ற வன்முறை நாஜி தாக்குதலை ஒத்திருந்தது!

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் வெற்றிபெற்றமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் அந்நாட்டு நாடாளுமன்றமான கப்பிடல் கட்டடத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றபோது அங்கு நுழைந்த குடியரசு கட்சியைச் சேர்ந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட வழிமுறைகளை கையாண்டனர். இந்த வன்முறை சம்பவத்தில் பொலிஸ் உட்பட மொத்தம் 5 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.



அமெரிக்க வரலாற்றில் இந்த நிகழ்வு ஒரு கருப்பு நாளாக பார்க்கப்படுவது மட்டும் அல்லது இந்த வன்முறை சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்நிலையில், அமெரிக்க நாடாளுமன்றத்தின் மீதான வன்முறை தாக்குதல் நாஜி தாக்குதலை போலஒத்திருந்தது என கலிபோர்னியா மாகாண முன்னாள் கவர்னர் அர்னால்டு ஸ்வாஸ்நேகர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளிட்டுள்ள அறிக்கையில், நாஜிக்கள் 1938 இல் யூதர்களுக்கு எதிராக வெறியாட்டத்தை மேற்கொண்டனர், அதேபோல், கடந்த புதன் கிழமை கலவரத்தில் ஈடுபட்ட டிரம்பின் ஆதரவாளர்கள் நாஜிக்கு சமமானவர்கள் எனத் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்க வரலாற்றில் மிகவும் மோசமான ஜனாதிபதியாக திகழ்பவர் ட்ரம்ப் என காட்டமாக கூறிய அர்னால்டு, ட்ரம்ப் முதுகெலும்பு அற்றவர் எனக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

## வரலாறு காணாதளவு பனிப்பொழிவு ஸ்பெயினில்

ஸ்பெயின் நாட்டில் பிலோமினா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொருட்கள் மற்றும் தடுப்பூசிகள் ஆகியவை ஹெலிகாப்டர் மூலம் மாட்ரிட் அவசர சுகாதார சேவைத் துறையினர் எடுத்துச் செல்லப்பட்டன.

அவர்கள் ஹெலிகாப்டரில் பயணம் செய்யும் போது ஸ்பெயினில் உள்ள முக்கிய சாலைகள், இருப்பு பாதைகள், வானுயர்ந்த கட்டடங்கள் என எங்கு நோக்கினும் பனி படர்ந்து ஒரே வெண்ணிறமாய் காட்சி அளிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அங்கு அடுத்த வாரம் மைனஸ் பத்து டிகிரிக்கும் கீழே வெப்பம் பதிவாகும் என்றும் இதனால் கடுமையான பனி பொழிவு இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



## தடுப்பூசிக்கு தயாராகிறேன் போப் பிரான்சிஸ் அறிவிப்பு



அடுத்தவாரம்தாம் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள இருக்கிறார் என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். வாடிகன் சிட்டியில் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டிக்கும் போது அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொருவரும் தங்கள் உயிரை மட்டுமல்ல மற்றவர்களையும் பாதுகாக்கக் கண்டிப்பாக தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும் எனவும் நெறிமுறைப்படி அனைவரும் தடுப்பூசி எடுக்க வேண்டுமென்று தாம் நம்புகின்றார் எனவும் தெரிவித்தார்.

இதேநேரம் வாடிகன்சிட்டியில் போப் பிரான்சிஸ் உட்பட 450பேர் உள்ளனர். அங்கு அடுத்த வாரம் முதல் கொரோனாத் தடுப்பூசி போடப்பட இருக்கும் நிலையில் கொரோனாத் தடுப்பூசி போடு வதற்கான முன்பதிவில் போப்பும் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடகொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சி பொதுச்செயலாளராக கிம் ஜாங் உன் தேர்வு

வடகொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சியின் பொதுச் செயலாளராக அதிபர் கிம் ஜாங் உன் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என அதிகாரபூர்வமாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரிய அதிபரும், தொழிலாளர் கட்சியின் பொது செயலாளருமான கிம் ஜாங் – 2 கடந்த 2011 ஆம் ஆண்டில் மரணமடைந்ததை அடுத்து அவரது மகனான கிம் ஜாங் உன் அதிபராக பதவியேற்ற போதிலும், பொதுச் செயலாளர் பதவிக்கு யாரும் புதிதாக தேர்வு செய்யப்படாமல் இருந்த நிலையில் நேற்று நடைபெற்ற கட்சி மாநாட்டில் பொதுச்செயலாளராக கிம்ஜாங் உன் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டனத் தீர்மானத்துக்குத் தயாராகுங்கள் ஜனநாயக கட்சி எம்பிக்களுக்கு சபாநாயகர் கடிதம்

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கலவரத்தைத் தூண்டிய குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ள அதிபர் ட்ரம்ப் மீது பிரதிநிதிகள் சபையில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்படும் என சபாநாயகர் நான்சி பெலோசி தெரிவித்துள்ளார்.

சக ஜனநாயகக் கட்சி எம்.பிக்களுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து அது தொடர்பான வாக்கெடுப்புக்குத் தயாராக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



அதே நேரம், ட்ரம்ப் இனியும் பதவியில் நீடிக்கக் கூடாது என்பதால், அரசிசமைப்பின் 25 ஆவது சட்டதிருத்தத்தின் படி, ட்ரம்பை பதவியில் இருந்து நீக்க துணை அதிபர் மைக் பென்ஸ் நடவடிக்கை எடுப்பதே பொருத்தமாக இருக்கும் எனவும் பெலோசி தெரிவித்துள்ளார்.

## உற்சாகத்துடன் ஆரம்பமானது வருடாந்திர பனித் திருவிழா!









**ஹெய்லாங்ஜியாங் மாகாணத்தில் உள்ள ஹார்பின் என்ற இடத்தில் கடந்த 1985 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஜனவரி மாதமும் பனித் திருவிழா கொண்டாடப்படுவது வழக்கம். முழுக்க முழுக்க பனி யால் செய்யப்பட்ட மாளிகைகள், கோபுரங்கள், விளையாட்டு மைதானங்கள், சிற்பங்கள் என பல்வேறு அற்புதங்களை அங்கு காணலாம்.**

**இதற்காக பல்லாயிரம் தொண் எடை கொண்ட பனியை வெட்டி கலைநயத்துடன் உருவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்று என்பதால் நடப்பாண்டு இந்நிகழ்வு நடக்குமா என ஏற்பட்ட ஐயம் போக்கப்பட்டு, கோலாகலமாக ஹார்பின் பனித் திருவிழா தொடங்கியுள்ளது.**






# இன்று முதல் விசேட கண்காணிப்பு: பொலிஸ் பேச்சாளர் அதிரடி அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள நிறுவனங்கள், காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட தொழில் ஸ்தானங்களிலும் பொது போக்குவரத்தின் போதும், தனிமைப் படுத்தல் விதிமுறைகள் முறையாக கடைப் பிடிக்கபடுகின்றனவா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக இன்று (திங்கட்கிழமை) முதல் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாடளாவிய ரீதியில் உள்ள நிறுவனங்கள், காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட தொழில் ஸ்தானங்களிலும் பொது போக்குவரத்தின் போதும், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கபடுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்காக இன்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் சுகாதார பிரிவினருடன் பொலிஸாரும் இணைந்து செயற்படவுள்ளனர். பொது போக்குவரத்து தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

சமூக இடைவெளியைப் பேணல், முகக்கவசம் அணிதல், கைகளை சுத்தம் செய்து கொள்வதற்கான வசதிகள், உடல் வெப்பநிலை அளவிடுதல் உள்ளிட்டவை பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளன.

மேல்மாகாணத்தைத் தவிர்த்து நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் நேற்று காலை ஆறுமணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2 ஆயிரத்து 381 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாகாணத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் முகக்கவசம் அணியாத 166 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் 103 பேர் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்படுப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவர்களுள் ஒருவருக்கும் கொவிட் - 19 வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை. எஞ்சிய 63 பேருக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதன் முடிவுகள் இன்னும் (நேற்று பகல் வரை) கிடைக்கவில்லை.

கடந்த 5 ஆம் திகதி முதல் இதுவரையில் மேல்மாகாணத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 191 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுள் 1,180 பேர் அன்டிஜன் பரிசோதனைகளுக்கும், 1,011 பேர் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.



பி.சீ.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களுள் 700 பேருக்கான முடிவுகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இந்த பரிசோதனைகளின் போது 24 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தில் காணப்படும் மீன் சந்தைகளில் 580 பேருக்கு எழுமாறாக அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் அவர்களில் மூவருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. - என்றார்.

## சுகாதாரப் பாதுகாப்புகளுடன் பாடசாலைகள் மீள ஆரம்பம்!

மேல் மாகாணம் மற்றும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று (திங்கட்கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய மிகவும் பாதுகாப்புடன் பாடசாலைகள் இன்றையதினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திறக்கப்பட்ட பாடசாலைகளில் 2 -13 ஆம் வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேநேரம், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தலில் உள்ள பாடசாலைகளில் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மாத்திரம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில் பாடசாலைகளுக்கான முதலாம் தர மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் செயற்பாடுகளும் ஆரம்பமாகவுள்ளன.

சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் முன்னதாக கல்வியமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும்போதும் பாடசாலைகளில் இருக்கும்போதும் பாடசாலைகளை விட்டு வெளியேறும் போதும் முகக்கவசம் அணிகின்றமை கட்டாயமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப பிரிவு மாணவர்களுக்குத் தொடர்ந்தும் முகக் கவசத்தை அணிந்திருப்பது அசௌகரியமாக இருக்குமானால் இடைவெளியை பேணும் சந்தர்ப்பங்களில் அதனை அகற்ற முடியும் என்றும் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போதும் அனைத்து மாணவர்களினதும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஒன்றுசேர்வதை தவிர்ப்பதற்காக வகுப்பு மட்டத்தில் ஓய்வு நேரம் வழங்கப்பட வேண்டும் என்றும் மாணவர்கள் தமது வீடுகளிலிருந்து எடுத்து வரும் உணவு, குடிதண்ணீர் மற்றும் பாட சாலை உபகரணங்களை பரிமாற்றிக்கொள்ளக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூர இடைவெளியைப் பேணி, உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். பிள்ளைகளின் மன நல சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளின் அவசியம் தொடர்பாகவும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகள் ஹர்த்தால் காரணமாக இன்று நடைபெறவில்லை என்றும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

வவுனியாவில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஒருவர் நேற்றிரவு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற மோதலின்போது அங்கு வந்த மனைவியின் சித்தப்பாவால் இந்தப் பெண்ணின் கணவன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையுடன், கட்டையாலும் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதேச வாசிகள் ஓமந்தை பொலிஸாருக்குத் தகவலைத் தெரிவித்துள்ளனர். தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டநபரைக் கைதுசெய்துள்ளமையுடன், துப்பாக்கியையும் மீட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குள்ளானவர் 29 வயதுடைய தேவராசா ஜெயசுதன் என்பவர் ஆவார். அவர் வவுனியா வைத்தியாசாலை தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாவிலிருந்து பலர் குணமடைந்தனர்

*கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 487 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதனையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 325 ஆக அதிகரித்துள்ளது.*

*நாட்டில் இதுவரையில், 47 ஆயிரத்து 840 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 229 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## 12 வயது சிறுமி சடலமாக மீட்பு!

### மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்பு பெரிய கல்லாறு - 2 நாவலர் வீதி பகுதியில் இன்று காலை க.கஸ்மினா எனும் சிறுமி ஒருவர் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமி, தாய் வெளிநாடு சென்ற நிலையில் தனது தாயின் சகோதரியின் பராமரிப்பில் வளர்ந்து வந்துள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த சிறுமி இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் மரணம் தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸார் மேலதிக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுமியின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி வைத்தியாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778




# கொரோனாத் தொற்றாளர் 40 ஆயிரத்தைத் தாண்டியது!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 536 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுள் 236 பேர் மினுவங்கொட, பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, மினுவங்கொட, பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புபட்டவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 618 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 380 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 41 ஆயிரத்து 325 பேர் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில், நோய்த் தொற்றுக்கு உள்ளான 6 ஆயிரத்து 822 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதேவேளை மேலும் மூன்று கொரோனா மரணங்கள் நேற்றைய தினம் உறுதி செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு சிறைச்சாலைக் கைதியான 62 வயதான ஆணொருவர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த 08 ஆம் திகதி மரணமானார்.

மரணத்துக்கான காரணம் கொவிட் நிமோனியா நிலை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதான பெண் ஒருவர் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் கொவிட் தொற்றுக்குள்ளானவர் என இனங்காணப்பட்ட பின்னர், பிம்புர ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த 10 ஆம் திகதி மரணமானார்.

மரணத்துக்கான காரணம் புற்றுநோய் நிலை மற்றும் கொவிட் நிமோனியா நோய் நிலை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதான ஆண் ஒருவர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 09 ஆம் திகதி மரணமானார்.

மரணத்துக்கான காரணம் கொவிட் நிமோனியா மற்றும் இருதய நோய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 232 ஆக அதிகரித்துள்ளது.

# சாரதி அனுமதிப்பத்திர செல்லுபடி காலத்தை நீடிக்க நடவடிக்கை!

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களில் செல்லுபடிக் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதுள்ள கொவிட் - 19 நிலைமைக்கு மத்தியில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க இயலாமையைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எட்டப்படும் என்று போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பையும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.01.2021இல் வெளியிடப்பெற்றது.